# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAKARAN DATED 30.04.2025



மத்திய கல்வி அமைச்சகம் சார்பில் நடந்த

### டெல்லி மாநாட்டில் புதுவை பல்கலை. துணைவேந்தர் பங்கேற்பு



புதுச்சேரி, ஏப். 30: மத்திய கல்வி அமைச்சகம் மற்றும் வாத்வானி அறக்கட்டளை இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஒய்.யு.ஜி.எம் மாநாடு-2025 டெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், வாத்வானி அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர் ரோமேஷ் வாத்வானி, மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு மற்றும் கல்வி இணை அமைச்சர் ஜிதேந்திர சிங், மத்திய வடகிழக்கு மாகாண வளர்ச்சி மற்றும் கல்வி இணை அமைச்சர் டாக்டர் சுகந்தா மஜூம்தார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதுவை பல்கலைக்கழகத்திலிருந்து துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு தலைமையிலான குழுவில், மேலாண்மை பள்ளி புல முதன்மையர் பேராசிரியர் நடராஜன் மற்றும் ராமானுஜன், கணித அறிவியலுக்கான பள்ளி புல முதன்மையர் டாக்டர் ராஜேஷ்வரி சேஷாத்ரி ஆகியோர் இந்த மாநாட்டில் பங்கேற்றனர். ஒய்.யு.ஜி.எம் மாநாடு அரசு, கல்வி, தொழில்துறை மற்றும் "வளர்ந்த பாரதம்" என்ற இலக்கை நோக்கி புதுமைச் சூழலை சேர்ந்த தலைவர்களை ஒருங்கிணைக்கும் முதலாவது உத்தி சார்ந்த கூட்டமாகும். சுமார் ரூ.1400 கோடி மதிப்பிலான இந்த கூட்டுத்திட்டம், அரசு நிறுவனங்களும் வாத்வானி அறக்கட்டளையும் இணைந்து நிதியளித்து செயல்படுத்தப்படுவதோடு, இந்தியாவின் கண்டுபிடிப்பு மற்றும் புதுமை பயணத்தை விரைவுபடுத்தும் முக்கியக் குறிக்கோளுடன் முன்னெடுக்கப்படுகிறது.